Registered No. M-4483.

யுத்த சஞ்சிகை

மலர் IV.] 1943-ம் ஆண்டு அக்டோபர் மீ 8உ, வெள்ளிக்கிழமை [இதழ் 6

"நிலைமை மாறுகிறது; ஆனால் இது முடிவல்ல"

★

"போர் முடியும் நிலைமையில் இருக்கிறது என்ற தப்பு எண்ணம் உங்களுக்கு இருக்குமானால், அதை அடியோடு நீக்கி விடுங்கள். இனி ஏற்பட முடியாத ஒன்றின் பொருட்டு, பயிற்சி செய்வதும், ஆயத்தம் செய்வதும் அவசியமல்ல வென்று சிலர் நினைக்கக் கூடும். இனிமேல் தான் மகா கடுமையானதும் ரத்தக் களரியானதுமான போராட்டம் நடை பெறப் போகிற தென்று நான் உறுதியாய் நம்புகிறேன். யுத்த மேகங்கள் மீண்டும் ஐரோப்பாவிற்குத் திரண்டு செல்லும். வெற்றிதரத் தக்க கடைசி தாக்குதல் அங்கே தான் நடை பெறும். யுத்த ஆரம்ப காலத்தில் தென்னாப்பிரிக்கப் படைகள் அங்கிருந்தது போலவே, யுத்தம் முடிவடையும் போதும் அங்கேயிருக்கும். யுத்தத்தின் நிலைமை மாறக் கூடிய பருவத்தில் நாம் இருக்கிறோமே யொழிய, யுத்தம் முடியக்கூடிய பருவத்திலல்ல. நீங்கள் திரும்பி வரும் போது, வெற்றியுடன் மட்டும் வந்தால் போதாது; உங்கள் மனதில் சமாதானம் நிலவ வேண்டும்."

—பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ், தென்னாப்பிரிக்கப் பிரதம மந்திரி எகிப்திலிருக்கும் ரொடேஷியப் படைகளுக்கும் தென்னாப்பிரிக்கப் படைகளுக்கும் செய்த பிரசங்கம்.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
"நிலைமை மாறுகிறது ; ஆனால் இது முடிவல்ல"	1	"முற் பகல் விதைத்தால்...."	5
முரசொலி	2	அங்கும் இங்கும்	6
தலையங்கம் : அச்சு முறிகிறது	3	புலி வேட்டை	6
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4	யுத்த நாட் குறிப்புக்கள்	7

மு ர சொ லி.

"யுத்தம் முடிந்த பிறகு, சமுதாயத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் பெரும் நாச மேற்படாதபடி தடுக்க வேண்டியது அவசியம். இதற்கு யுத்தம் நடைபெறும் போதே, ஏதாவது ஒரு வகைக் கட்டுப்பாட்டிற்கு தொடர்ச்சியாக நம்மை உள்ளாக்கிக் கொள்ள வேண்டும். யுத்தம் உண்டாவதற்கு முன்பு எந்த அளவிற்கு வரி விகிதம் இருந்ததுவோ, அதற்கு அதிகமாக வரி விதிக்கப்பட வேண்டும். சேமிப்புங் கூட அதற் கதிகமா யிருக்க வேண்டும். யுத்த காலத்தில் எவ்வளவு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டதோ, அது போலவே சமாதானம் ஏற்பட்டவுடனேயும் ஏற்படும். சென்ற சில வருஷங்களாக, பிரிட்டன் நிர்வகிக்க வேண்டிய பிரச்சினைகளையும் நமது நிலைமையையும் சீர்தூக்கிப் பார்த்தால், உலகத்திலே மிகச் சிறந்த ஆட்சி, இங்கே தான் நடைபெறுகிற தென்று அது மெய்ப்பித்து விட்டது."

—**மிஸ்டர் ஹெர்பர்ட் மாரிசன்,** *பிரிட்டிஷ் உள் நாட்டு மந்திரி அக்டோபர் 3-ம் தேதி கூறியது.*

* * * * * *

"ஆசியாவை அடிமைப்படுத்த விரும்பும் ஜப்பானிய பாசிசம் தோற்கடிக்கப் பட்டால் மட்டுந் தான், ஆசிய மக்கள் தம் தேசீயப் புரட்சியைச் சாதித்து வெற்றி பெற முடியும். இதற்கு, அதனால் பயமுறுத்தப்படுகிற எல்லா நாடுகளும் ஒற்றுமை யடைய வேண்டும். இது தான் ஜன நாயக ஒற்றுமை ; இதில் சிறுபான்மைக் கட்சி உரிமைகளும், தேசீயக் கட்சியினருடைய உரிமைகளும் அங்கீகரிக்கப்படும். இப்படியாகத் தான், எதிர் காலத்தில் நாம் நமக்கு ஆதிக்கமும் சுயேச்சையும் தேடிக் கொள்ளலாம்."

—**ஸ்ரீமதி சென் எட் சென்.**

* * * * * *

"ஒவ்வொரு நாட்டிலும் பொருளாதாரக் கொள்கை மாறுபட்டிருக்கும். சர்வ தேச விஷயங்களிலே, இப்போதுள்ளது போல, வேறெக்காலத்திலும், உலகப் பொருளாதாரம் இனிது அமைவதற்கான பூர்வாங்க வேலைகள் செய்வதற்கு ஏற்ற தருணம், இருந்ததே கிடையாது. யுத்தம் முடிந்த பிறகு இந்த நிலைமை மேலும் விருத்தியாகும்."

—**மிஸ்டர் எர்னெஸ்ட் பிவின்,** *பிரிட்டிஷ் தொழில் மந்திரி மாஞ்செஸ்டரில் நடைபெற்ற தொழிலாளர் விழாவில் அக்டோபர் 3-ம் தேதி கூறினார்.*

* * * * * *

"யுத்தம் கிருஸ்மஸ் பண்டிகைக்கு முன்னதாகவே முடிவடைந்து விடுமென்று நினைப்பதற்குக் கொஞ்சமும் ஆதாரமே கிடையாது. ஐரோப்பியக் கோட்டையில் இப்போது தான் போராட்டம் ஆரம்பமாகிறது. அத்லாண்டிக் சமுத்திரத்தில் மீண்டும் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களின் அட்டகாசம் வெகு அதிகமா யிருக்கிறது. ஐரோப்பியக் கோட்டையை நாம் இன்னும் தகர்க்கவில்லை. இப்போது தான் நாம் அங்கே போய் இறங்கி யிருக்கிறோம். மிகவும் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் உண்டாக்கக் கூடிய பகுதி இனிமேல் தான் இருக்கிறது."

—**கர்னல் நாக்ஸ்,** *அமெரிக்கக் கடற் படை மந்திரி அக்டோபர் 3-ம் தேதி ஆல்ஜியர்ஸில் கூறியது.*

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV] 1943-௵ அக்டோபர்௴ 8௳ [இதழ் 6

அச்சு முறிகிறது

அச்சு நாடுகளின் அட்டகாசம் அடங்கிக் கொண்டு வருகிறது. அவற்றின் அழிவு காலமும் நெருங்கி விட்டது. இதற்குக் காரண மென்ன? முதலாவதாக ஜெர்மன் மக்களுக்குள் கடுமையான பீதி எற்பட்டு விட்டது. வெற்றி மேல் வெற்றியாக, அடுக்கிக் கொண்டிருந்த ஜெர்மனி, தோல்வி மேல் தோல்வி யுற்று தொலைந்து கொண்டு வருகிறது. ரஷ்யாவிலோ பெருந் தோல்வி. ஹிட்லரின் அதி முக்கியமான தளமாகிய ஸ்மாலென்ஸ்க் போய் விட்டது. இதனால், அவர்களுடைய நீண்ட போர் முனை முழுதுமே மிகவும் பாதிக்கப்படுகிறது. ரஷ்யர்கள் முன்னேறிக் கொண்டே வருகிறார்கள். க்ரெமென்சர்க் என்ற ஒரு முக்கியமான இடம் சென்ற வாரம் கைப்பற்றப்பட்டது. தாமான் தீபகற்பத்தை விட்டு ஜெர்மானியர்கள் வெளியேறி விட்டார்கள். இத்தாலியை எடுத்துக் கொண்டாலோ, அங்கும் அச்சுத் துருப்புகள் பின் வாங்கி ஓடிக்கொண்டிருக்கின்றன.

நேப்பில்ஸ், அழகே உருவான தோர் நகரம். "நேப்பில்ஸைப் பார்; பிறகு நீ இறந்து போகலாம்" என்று அதன் சிறப்பைப் பற்றிய பழமொழியை நீங்கள் கேட்டிருக்கலாம். அப்படிப் பட்ட நகரம், இப்போது நேச தேசத்தார் கையிலிருக்கிறது. இது மாத்திரமல்ல. நமது துருப்புகள் இத்தாலியின் தலை நகரான ரோமாபுரியை நோக்கி அதி வேகத்துடன் சென்று கொண்டிருக்கின்றன. ரஷ்யாவிலும் தோல்வி; இத்தாலியிலும் தோல்வி; தூரக் கிழக்குப் பிரதேசத்திலும் அச்சுப் படைகளுக்குத் தோல்வி. சில நாட்களுக்கு முன்பு, பின்ஷேபன் என்ற நியூ கினியிலுள்ள ஜப்பானிய தளம் கைப்பற்றப்பட்ட தென்று அறிவிக்கப்பட்டது. யுத்த அரங்கங்களில் ஜெர்மானியருக்கு எற்பட்டுக் கொண்டு வரும் தோல்விகளோடு கூட, ஆக்ரமிக்கப்பட்ட நாடுகளிலும் புகைந்து கொண்டிருக்கும் மக்களுடைய எதிர்ப்பையும் சேர்க்கலாம். ஜெர்மனி கைப்பற்றியுள்ள நாடுகளில், ஒரு ஊக்கம் பிறந்திருக்கிறது. அந் நாட்டு மக்கள் மட்டில்லாத சுதந்தர ஆவேசம் கொண்டிருக்கிறார்கள். ஜெர்மனியைக் கவிழ்க்க, தகுந்த தருணம் எது என்பது தான் அவர்கள் நோக்கம். பல்கேரியா, ருமேனியா, ஹங்கேரி முதலிய நாடுகள் ஜெர்மானியர் கைப் பற்றியவை. இந்நாடுகளிலிருந்து ஜெர்மனிக்கு உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டு வந்தன. இப்போது இது வெகுவாகக் குறைந்து விட்டது. நேச நாடுகளுடன் சமரசம் செய்து கொள்ளுவது பற்றி, இரகசிய முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஜெர்மானியர்களுக்கு விரோதமாக வெளிவரும அறிக்கைகள் பல. இப்போது ஜெர்மன் படைகளுக்கு எராளமான ஆட்கள் தேவை. ஆனால், அந்த ஆட்களை அனுப்ப, இந் நாடுகள் இசையவில்லை. இதுவரை ஹங்கேரி 2½ லட்சம் பேர்களை ஜெர்மன் படைகளுக்கும் 38,000 பேர்களை ஜெர்மன் தொழிற் சாலைகளுக்கும் அனுப்பி யிருக்கிறது. ருமேனியாவி லிருந்து 20 டிவிஷன் படைகளும், 12,000 தொழிலாளர்களும் ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டனர். இது போலவே மற்ற நாடுகளும் ஆயிரக் கணக்கான தம் மக்களை ஜெர்மனியின் நன்மையை முன்னிட்டு பலி கொடுக்க மறுக்கின்றன. இது வரை வேண்டா வெறுப்போடு ஜெர்மனியை ஆதரித்து வந்த நாடுக ளெல்லாம், இப்போது தம் விரோத மனப்பான்மையை வெளிப்படையாகக் காட்டத் தலைப்பட்டு விட்டன. இது ஜெர்மனிக்கு ஒரு பெரும் நஷ்டம். இரண்டாவதாக ஜெர்மனியை நாலா பக்கங்களிலும் எதிரிகள் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். செம் படைகள் வாயுவேக மனோ வேகமாக முன்னேறிக் கொண்டு வருகின்றன. ஜெர்மன் கற்கோட்டைக ளெல்லாம் தவிடு பொடி யாகின்றன. செம் படைகள் போலந்துக்கு 70 மைல்களுக் கப்பால் வந்து விட்டன. ஜெர்மானியர்கள் மகா கடுமையாக எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். என்றாலும், அதனால் பயனில்லை. ரஷ்யர்கள் வெற்றி முழக்கம் ஹிட்லருடைய காதுகளைத் துளைக்கிறது.

கிழக்கிலோ, பால்கன் நாடுகளில் குழப்பம் உண்டாவதற்கான அறிகுறிகள் வெகு தெளிவாகத் தெறிகின்றன. கியப் நகரம் அதி சீக்கிரத்தில் ரஷ்யர்கள் வசமாகி விடலாம். இத்தாலியிலோ மகா கடுமையான போர் நடைபெறுகிறது. நேச நாட்டுப் படைகளும் தளவாடங்களும் ஓயாது வந்து குவிந்த வண்ணமாகவே யிருக்கின்றன. நிகரில்லாது 4-ம் படையும் 8-ம் படையும் அமெரிக்க 5-ம் படையும் ஜெர்மன் படைகளைத் திணற அடிக்கின்றன. பிரின்டிசி நகரத்தைக் கைப்பற்றி விட்டன. வடக்கே யுள்ள பாரி என்னும் இடமும் நேச நாட்டினர் கைக்கு வந்து விட்டது. இந்த இரண்டு இடங்களிலும், இவற்றை யடுத்தும், பல விமான தளங்கள் இருக்கின்றன. இங்கிருந்த அநேக விமானங்களை, அப்படியப்படியே விட்டு விட்டு, ஜெர்மன் படைகள் ஓடிப் போக நேர்ந்தது. இந்த விமானங்களும் விமான தளங்களும், நேச நாட்டுப் படைகளுக்குப் பெரிதும் பயன்படும். அங்கிருந்து மத்திய இத்தாலியையும் வட இத்தாலியையும் இலகுவில் தாக்கலாம். இப்போது போக்கியாவும் அதை யடுத்துள்ள விமான தளங்களும் நேச நாட்டினர் கைக்கு வந்து விட்டன. ஆகவே, நேச நாட்டுப் படைகள் மேலும் வெற்றி பெறுவது நிச்சயம் என்றே சொல்லலாம். ஜெர்மனிக்கு மேற்கே பிரான்சு இருக்கிறது. இது சுதந்தர நாடா யிருந்தது. இப்போது ஜெர்மானியர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறது. பல வகைத் தொல்லைகளுக்கும் உள்ளாகி யிருக்கிறது. ஜெர்மானியர்கள் அங்கு நடத்தும் அட்டூழியங்கள் சொல்லுந் தரமல்ல. ஆகவே, அங்கேயும் கிளர்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. நாஜி உத்தியோகஸ்தருள் ஒருவரான டாக்டர் ரிட்டர் என்பவரை பட்டப் பகலில், காலை 9 மணிக்கு சமீபத்தில் பாரிஸ் நகரத்தில் சுட்டுக் கொன்று விட்டார்கள். இப்போது ஜெர்மனி கால் வைத்திருக்கு மிடமெல்லாம், முள்ளும் கல்லும் தான். மூன்றாவதாக ஜெர்மனிக்குக் கிடைத்துக் கொண்டிருந்த பெட்ரோல் எண்ணை இப்போது மிகவும் குறைந்து விட்டது. உக்ரெய்ன் எண்ணெய்க் கிணறுகளுள் ஏறக்குறைய முழுவதும், மீண்டும் ரஷ்யர்கள் கைப்பற்றிக் கொண்டனர். ஆகவே, ஜெர்மானியர்களுக்கு அங்கிருந்து எண்ணெய் கிடைக்காது. ருமேனியாவிலிருந்தும் ஜெர்மானியர்களுக்கு சப்ளைகள் அதிகமாகப் போவதில்லை. அதாவது ப்ளியோஸ்டி எண்ணெய்க் கிணறுகளி லிருந்து எடுக்கப்படும் எண்ணெயை, ஜெர்மானியர்களுக்குக்கொடுக்க ருமானியர்கள் சம்மதிக்க மாட்டார்கள். அன்றியும் ஸ்வீடன் அரசாங்கம் இனி ஜெர்மனிக்கு எண்ணெய் அனுப்ப முடியா தென்று மறுத்து விட்டது. இந்தப் போரில் போதுமான 'பெட்ரோல்' இல்லாவிட்டால், யார் தான் என்ன செய்ய முடியும்? பெரும் படைகளும் எராளமான தளவாடங்களும் இருந்த போதிலும் ஒரு காரியமும் நடவாது. இது ஜெர்மனியின் இடுப்பை முறித்து விட்டது. இது மட்டுமா? ஜெர்மனியின் உற்பத்தி ஸ்தானங்க ளெல்

லாம் தவிடு பொடியாகின்றன. இரவு பகலென்று பாராமல், பிரிட்டிஷ் விமானப் படையும் அமெரிக்க விமானப் படையும் ஜெர்மனியின் கைத்தொழில் பகுதியான ரூர் பிரதேசத்தை மிகக் கடுமையாகத் தாக்கிக் கொண்டிருக்கின்றன. பல தளவாட உற்பத்தித் தொழிற்சாலைகளும், விமான உற்பத்திச் சாலைகளும், மின்சார இயந்திர உற்பத்திச் சாலைகளும் படு நாசமடைந்தன. இவற்றால் ஜெர்மனியின் போராட்டம் ஸ்தம்பித்துப் போகத் தக்கதோர் நிலைமை விரைவில் ஏற்படலாம். சமீபத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரியான மிஸ்டர் சர்ச்சில் செய்ததோர் பிரசங்கத்தில், சென்ற 3 மாதங்களாக, ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களால் நேச நாடுகளின் கப்பல் ஒன்றாவது சேதமடையவில்லை என்றும், நாளொன்றிற்கு ஒரு ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல் வீதம் சராசரி மூழ்கடிக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, ஜெர்மனியின் பலம் எல்லா வகைகளிலும் அழிந்து கொண்டு வருகிறது என்று வெகு தெளிவாகத் தெரிகிறது. சுமார் ஒரு வருஷத்திற்கு முன், ஹிட்லர் ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது அங்கே கூடியிருந்த மக்கள் அவரைக் கண்டதும் செய்த குதூகல ஆரவாரம் சொல்ல முடியாது. அவர் அன்று என்ன சொன்னார் தெரியுமா ? ‘ ஐரோப்பாவின் எந்தப் பகுதியிலாவது நேச நாட்டினர் இறங்கி, 9 மணி நேரம் இருக்கக் கூடுமானால், அவர்கள் அதிர்ஷ்டசாலிகளாகத் தான் இருக்க வேண்டும் ’, என்று கூறினார். அதாவது, யாரும் ஐரோப்பாவில் காலடி எடுத்து வைக்க முடியாது என்று அறைகூவினார். அன்று அவர் பேசிய வீர மெங்கே, இன்று அவருள்ள நிலைமை எங்கே ? இவருடைய நிலைமை தான் இப்படி யென்றால், இவருடைய கூட்டாளியான முசோலினியின் நிலைமை என்ன ? சிறகிழந்த பறவை ; நகமிழந்த புலி. இது தான் இவருடைய உண்மை நிலை. ‘ புலி பசித்தால் புல்லைத் தின்னாது ’ என்பார்கள். ஆனால் முசோலினிப் புலி, புல்லை மட்டுமல்ல, மண்ணைக் கூடத் தின்கிறேன் என்று சொல்லுகிறது. ஆனால் அந்த மண்ணை ஹிட்லர் தான் ஊட்ட வேண்டுமாம். ‘ஆடு கசாப்புக்காரனை நம்புவதைப் போல ’ முசோலினி இன்னும் ஹிட்லரை நம்பிக் கொண்டிருக்கிறார். இத்தாலிய சாம்ராஜ்யத்தை ஹிட்லரின் உதவியினால் மீண்டும் கட்டியாளலா மென்று மனப்பால் குடிக்கிறார். இப்போது இத்தாலியில் நேச நாட்டுப் படைகள் மேலும் மேலும் முன்னேறிக் கொண்டிருப்பதனால், முசோலினிக்குத் தோல்வி என்று தான் அர்த்தம். படாக்ளியோ நேச நாடுகளுடன் சமரசம் செய்து கொண்டதனால், பிரிட்டிஷ் கப்பற் படையில் பெரும் பகுதி, மத்திய தரைக் கடலிலிருந்து தூரக் கிழக்கு நாடுகளுக்குப் போய்க் கொண்டிருக்கின்றன. இதன் பயனாக நியூ கினியில் ஜப்பானியர்கள் படு தோல்வி யடைந்து கொண்டிருக்கிறார்கள். சீனாவிலும் ஜப்பானியர்கள் முன்னேறக் கூடவில்லை. ஜப்பானிய கம்பெனிகளுள் மிகப் பெரிது மித்சு கம்பெனி. இந்தக் கம்பெனி பிரமுகர்களுக்கும் வட சீனாவிலுள்ள ஜப்பானிய அரசாங்க அதிகாரிகளுக்கும் பெரும் மனத் தாங்கல் ஏற்பட்டு, அந்த அதிகாரிக ளெல்லாம் ராஜிநாமாச் செய்து விட்டார்க ளென்று தெரிகிறது. இவற்றைக் கொண்டு சீர்தூக்கிப் பார்த்தால், அச்சு நாடுகள் அழியுங் காலம் அருகி லிருக்கிறது என்றும், நேச நாடுகள் வெற்றி மேல் வெற்றி பெற்று அடிமைப்பட்டிருக்கும் நாடுகளை மீட்டு அவற்றிற்கு நல்வாழ்வு வழங்கப் போகின்றன என்றும், துணிந்து கூறலாம்.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

அத்லாண்டிக் சமுத்திரத்தில் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள்.

அத்லாண்டிக் மகா சமுத்திரத்தில் போய்க் கொண்டிருந்த நேச நாட்டுத் துணைக் கப்பல்களை ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் தாக்கின. இச் செய்தியின் விவரம், அக்டோபர் மாதம் 2-ம் தேதிப் பத்திரிகைகளில் வெளி வந்திருக்கின்றது. சென்ற சில மாதங்களாக ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் எந்த நேச நாட்டுக் கப்பலையும் மூழ்கடிக்கா விட்டாலும், அவற்றை வேட்டையாடிக் கண்டுபிடிக்க பல கப்பல்கள் கிளம்பியிருக்கின்றனவென்று காமன்ஸ் சபையில் செப்டெம்பர் மாதம் 21-ம் தேதி மிஸ்டர் சர்ச்சில் குறிப்பிட்டதை இது ஞாபகப் படுத்துகிறது. ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களால் தாக்கப்பட்ட கப்பல்களிலிருந்து உயிர் தப்பிப் பிழைத்தவர்களைக் கேட்டால், முன்பு அந் நீர்மூழ்கிக் கப்பல்கள் அடைந்த வெற்றிகளைப் போல, இப்போது அவை வெற்றி பெற வில்லை யென்று கூறுகிறார்கள். ஒரு பெருந்துணைக் கப்பல் போராட்டம் நடைபெறும் போது, மூன்று கப்பல்கள் மூழ்கடிக்கப்படுவது ஒரு பெரிய நஷ்டமென்று சொல்ல முடியாது என்று ராய்ட்டர் விசேஷ நிருபர் கூறுகிறார். “ சென்ற 4 மாத காலமாகத் தம் நீர்மூழ்கிக் கப்பல்களைத் திருத்தி யமைத்த பிறகுங் கூட, இதை விட மேலாகப் போராடக் கூட வில்லையானால், அதுபற்றி நாம் அதிகமாகக் கவலைப்படத் தேவையில்லை,” என்று ஒரு உத்தியோகஸ்தர் குறிப்பிட்டார்.

கொஞ்ச காலமாக அத்லாண்டிக் போராட்டத்தில் அமைதி நிலவியது. அதுபற்றி ஜெர்மன் பேச்சாளர்கள் என்ன கூறினார்கள் ? இவை பற்றி கவனிப்போம்.

சென்ற மே மாதம் 5-ம் தேதி ஜெர்மன் கப்பற் படை விமர்சகரான உதவி அட்மிரல் லுட்சோவ் பெர்லினிலிருந்து ஒலி பெருக்கியதோர் பிரசங்கத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார் :—

“ கடலிலே ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள் எங்கே இருக்கின்றன வென்று கண்டு பிடிப்பதற்கு வெகுவாக விருத்தியடைந்த கருவிகள் எதிரியிடம் இருக்கின்றன. நீர்மூழ்கிப் கப்பல்களின் வெற்றிகள், படிப்படியாக அதிகப்படும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.”

அந்த மாதக் கடைசியில் (29-ம் தேதி) பெர்லின் உள்நாட்டு விமர்சகரான ஹான்ஸ் ப்ரிட்ஸ் கூறியதாவது :—

“ நமது ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள் நடத்தும் யுத்தத்தைப் பற்றிய செய்திகள், எப்போதோ ஓர் சமயத்தில் தான் கிடைக்கின்றன.”

அமைதி பற்றி கொப்பல்ஸ் நொண்டிச் சமாதானம்.

இந்த அமைதியைக் குறித்து டாக்டர் கொப்பல்ஸ் ஜூன் மாதம் 5-ம் தேதி விளக்கிக் கூறியதாவது :—

“ நமது நீர்மூழ்கிக் கப்பல்கள் பெரும்பெரும் வெற்றிகள் பெற்றுக் கொண்டிருந்தன. அந்தக் காலத்திற்குப் பிறகு, தற்காலீகமாக வெற்றிகள் குறைவது, சகஜம் தான்.”

ஒரு மாதத்திற்குப் பிறகு ஜூலை 2-ம் தேதி பெர்லின் விமர்சகர் ஒருவர் ஸ்பெய்ன் நாட்டினருக்கு செய்ததோர் பிரசங்கத்தில் கூறியதாவது :—

“ இந்தக் காலத்தில் துணைக் கப்பல்களாக அநேக சிறு கப்பல்களும் அதி வேகமாகப் போகக்கூடிய கப்பல்களும் நேச தேசங்களின் சாமான் கப்பல்களுக்குப் பாதுகாப்பாகப் போகின்றன. இதனால் நீர்மூழ்கிப் கப்பல்கள் வெகு ஆழத்தில் மூழ்கி, தம் வேகத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டியதாகிறது. அன்றியும் தாம் எந்த இடத்திலிருந்து தாக்கலாமோ அந்த இடத்தை விட்டு அகன்று விடவும் நேருகிறது. விமானங்களி லிருந்து வெடி குண்டுகள் எறியப் படுவதனாலும், துணைக் கப்பல்களும் நீரில் மூழ்கித் தாக்குவதனாலும், அவற்றை அணுகுவது மிகவும் கஷ்டமா யிருக்கிறது. ஆகவே ஒரு துணைக் கப்பல் கோஷ்டியைத் தாக்குவதென்றால் மகா கஷ்டமா யிருக்கிறது.”

இந்த அமைதிக்கு என்ன காரணம் என்று விளக்கிக் கூறுவதற்கு நாஜிகள் எவ்வளவு பாடு படுகிறார்கள் என்று ஒரு உதாரணத்தைக் கொண்டே தீர்மானிக்கலாம். வைஸ் அட்மிரல் லூட்சோவ் என்னும் கப்பற் படை யதிகாரி யொருவர் செய்த ஒரு வானொலிப் பிரசங்கத்தில், அந்த 15 நிமிஷ நேரமும், இதைப் பற்றியே பேசினார்! எதிரிக் கப்பல்களை வேட்டையாடிக் கொண்டிருந்த (ஜெர்மன்) நீர் மூழ்கிக் கப்பல்கள் தம் தளத்தை விட்டுக் கிளம்பியது முதல், இப்போது எப்படி வேட்டையாடப் படுகின்றனவென்றும் விளக்கிக் கூறினார்.

வட அத்லாண்டிக் கடலில் ஒரு வியாபாரக் கப்பலாவது எதிரிகளால் மூழ்கடிக்கப் படவில்லை யென்றும், அமெரிக்கா யுத்தத்தில் இறங்கியதிலிருந்து 1943-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் தான், மிகக் கொஞ்சம் கப்பல்கள் மூழ்கடிக்கப் பட்டன வென்றும்; பிரதம மந்திரி குறிப்பிட்டார். அன்றியும் இந்த வருஷம் ஜனவரி மாதத்திலிருந்து நேச நாடுகளின் வியாபாரக் கப்பல்கள் 60 லட்சம் டன் அதிகரித்திருக்கின்றன வென்றும், இதுவரை சேதமான கப்பல்களுக் கெல்லாம் கூடிய விரைவில் ஈடுசெய்து விடப்படு மென்றும் அவர் கூறினார். கப்பற் படைகளில் நாம் இவ்வளவு பெரும் மாறுதல்களை உண்டாக்கியுங் கூட, ஏறக்குறைய சென்ற ஒருவாரமாக, அத்லாண்டிக் கடலில் "ஒரு மந்தை ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள்" வந்து கொண்டிருக்கின்றன. போராட்டம் மறுபடியும் இங்கே ஆரம்பமாகி விட்டது.

ஹிட்லரின் முக்கியமான ஆயுதமும் அதன் பலக் குறைவும்.

ஜெர்மன் கப்பற் படை விமர்சகர் ஜூலை மாதம் 10-ம் தேதி செய்ததோர் வானொலிப் பிரசங்கத்தில் கூறியதாவது :—

"துணைக் கப்பல்களாகப் போகும் நாசகாரிக் கப்பல்களும் விமானப் படைகளும் பார்க்கக் கூடிய தூரத்தில், 8-ல் ஒரு பங்கு தூரந்தான், ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் நீர் மட்டத்திலிருக்கும் போது, பார்க்கக் கூடும். எந்த அளவிற்கு நீர் மூழ்கிக் கப்பல்கள் நீரில் மூழ்கி, தணிந்த வேகத்தில் போகும்படியான நிர்ப்பந்தம் நேருகிறதோ, அந்த அளவிற்கு, அந்நீர் மூழ்கிகளைத் தாண்டி, பாதிக்கப் படாமல், துணைக்கப்பல்க்ள் போய்விடக் கூடும்."

ஜெர்மானியத் தலைவர்கள் இதற்கு முன்பு இப்படிச் சொல்லுவது கிடையாது. தம் நீர் மூழ்கிக் கப்பல்களின் விசேஷத் திறமையைக் குறித்தும் அவற்றின் வெற்றிகளைக் குறித்தும் பிரமாதமாக பெருமை யடித்துக் கொள்ளுவார்கள். பிரிட்டனை வெல்வதற்குத் தன் நீர் மூழ்கிக் கப்பல்கள் தான் "முக்கியமான ஆயுதம்" என்று சென்ற வருஷம் ஹிட்லர் குறிப்பிட்டார். 1942-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 26-ம் தேதி அவர் கூறியதாவது :—

"மாதந் தோறும் நம் நீர் மூழ்கிக் கப்பல்கள் என்னென்ன சாதிக்கக் கூடியவை என்று தொடர்ச்சியாகச் செயலில் காட்டப்படும்."

சென்ற 5 மாதங்களோடு, சென்ற வருஷத்திய அதே ஐந்து மாதங்களையும் எடுத்து, இந்த ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் சாதித்தவை என்னவென்று ஒப்பிட்டுப் பார்த்தால், ஜெர்மானியர் கூறியது உண்மை யல்ல வென்றும், அவற்றின் வெற்றிகள் வெகுவாகக் குறைந்து விட்டன வென்றும் தெளிவாகத் தெரியவரும். 1942-ம் வருஷத்திலும் 1943-ம் வருஷத்திலும் இந்த மாதங்களில் இவை யடைந்த வெற்றிகளைக் குறித்து ஜெர்மானியர்கள் ஒலி பரப்பிய தகவல்களைக் கொண்டு ஒப்பிட்டுப் பார்ப்போம்.

மூழ்கடிக்கப்பட்டதாகக் கூறப்படும் கப்பல்களின் எண்ணிக்கை.

மாதம்.	1942.	1943.
ஏப்ரல்	99	63
மே	140	76
ஜூன்	156	31
ஜூலை	128	94
ஆகஸ்டு	125	70
ஆக 5 மாதங்களில் ..	648	334

இவை விமானங்களாலும் போர்க் கப்பல்களாலும் நீர் மூழ்கிக் கப்பல்களாலும் மூழ்கடிக்கப்பட்டவை. நீர் மூழ்கிக் கப்பல்கள் மட்டும் பெற்றிருக்கும் வெற்றிகளைக் கணக்கெடுத்துப் பார்ப்போம். 1942-ம் வருஷம் ஜூன் மாதம் ஜெர்மன் நீர் மூழ்கிகள் மூழ்கடித்தது 132 கப்பல்கள்; ஆனால் 1943-ம் வருஷம் ஜூன் மாதத்தில் 20 மட்டுந்தான் மூழ்கடிக்கப்பட்டன. 1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் 111 கப்பல்களை மூழ்கடித்துவிட்டதாக ஜெர்மானியர்கள் கணக்கிடுகிறார்கள். ஆனால் 1943-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் 15 கப்பல்கள் தான் மூழ்கடிக்கப் பட்டன.

ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களின் எதிர்ப்பு வெற்றி.

ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் வெற்றி பெற முடியாதபடி சென்ற 5 மாதங்களாகத் தடுக்கப் பட்டு விட்டன வென்பதை இந்தப் புள்ளி விவரங்கள் மெய்ப்பிக்கின்றன. 1943-ம் வருஷம் மே மாதம் 1-ம் தேதி முதல் ஜூலை மாதம் 31-ம் தேதிக்குள் 90 ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டு அழிந்தன வென்பது இங்கே குறிப்பிடத் தக்கது. சிசிலி படை யெடுப்பின் போது 2,700 கப்பல்கள் ஈடுபட்டிருந்தன. அங்கே நமக்கு நேர்ந்த சேதமெல்லாம் 80,000 டன்கள் தான். இந்தப் புள்ளிகளிலிருந்து இரண்டு விஷயங்கள் தெளிவாகத் தெரிகின்றன. எதிரியின் நீர் மூழ்கிக் கப்பல்களில் 5-ல் ஒரு பங்கு அழிக்கப் பட்டுவிட்டன. அதுவும் அவற்றை ஈடு செய்து கொள்ள முடியாதபடி அவ்வளவு வேகமாக அழிக்கப்பட்டு விட்டன. இரண்டாவது விஷயம் என்ன வென்றால், பெரிய கடற் போரில் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் எதுவும் செய்ய முடியாது.

முற்பகல் விதைத்தால்....!

1940-ம் வருஷத்திலே பெல்ஜிய மன்னர் திடீரென்று ஜெர்மானியரிடம் சரணாகதி யடைந்துவிட்டது காரணமாக, பிரிட்டிஷ் படைகளின் நிலைமை எக்கச்சக்கமாகி விட்டதல்லவா? அப்பொழுது அப்படைகள் எல்லாம் தப்பிப் பிழைத்து சீமைக்கு ஓடின அல்லவா? அந்தச் சமயத்திலே டங்கர்க் என்ற இடத்திலே கூடி யிருந்த லக்ஷக்கணக்கான பிரிட்டிஷ் வீரர்களையும், ஆயிரக் கணக்கான பிரிட்டிஷ் படகுகளையும், கப்பல்களையும், விமானங்களையும் நாஜி விமானிகள் பேய்கள் கொள்ளும் உத்சாகத்தோடு கண்மூடித்தனமாகத் தாக்கி, ஏகப்பட்ட சேதத்தை விளைவித்தார்கள் அல்லவா? அது முதல், யாராவது, எங்காவது தரையிலிருந்து சமுத்திரத்திற்குப் பின் வாங்கி, கடல் கடந்து எதிர் கரை அடைய முயற்சித்தால், 'டங்கர்க் வியாபாரம் நடக்கிறுப் போலிருக்குமோய்!' என்று சொல்லுவது வழக்கமாகி விட்டது. இந்த 'டங்கர்க் செய்கிறது' என்கிற கூட்டு வார்த்தை கூட இனி அகராதியில் இடம் பெற்று விடும் போலிருக்கிறது.

இது ஆறாத புண்ணாகவே பிரிட்டிஷார் உள்ளங்களில் எந்நாளும் இருந்து வரும். நாளை யுத்தம் முடிந்து, ஜெர்மனியும் தோற்று, பொது விசாரணை நடக்கும் பொழுது, டங்கர்க்கிற்கு ஈடு செய்து தரும்படி பிரிட்டிஷார் கேட்கத் தான் செய்வார்கள். அது ஒரு மறக்க முடியாத சம்பவமாகவே இருந்தது.

ஆனால், இப்பொழுது நேசதேசத்தார் தங்களது இணையற்ற கூட்டு பலத்தால் இத்தாலிய அரசாங்கத்தை யுத்தத்திலிருந்து வெளியேற்றி, நிபந்தனையற்று, சரணடையச் செய்துவிட்டார்கள். வட ஆப்பிரிக்காவிலிருந்து அச்சுப் படைகளை அலங்கோலத்தோடு ஓடச் செய்தார்கள். அங்கே ஜெர்மானியரை டங்கர்க் பழிக்குப் பழி வாங்கலாம் என்று எண்ணி யிருந்தார்கள். ஆனால், அங்கிருந்த ஜெர்மானியர் நம்மவர்களை ஏமாற்றி விட்டார்கள். அவர்கள் தப்பி ஓட முயற்சிக்காது, காலில் விழுந்து விட்டார்கள். அப்புறம் என்ன செய்வது? நம்மவர்களும் என்ன கருணையற்ற நாஜிகளைப் போலவா, யுத்தக் கைதிகளை கண்ணீர் வடிக்கச் செய்வார்கள்? வட ஆப்பிரிக்காவில் சிக்கிய கைதிகளைப் பத்திரமாக அமெரிக்காவிற்கும், சீமைக்கும் அனுப்பி விட்டார்கள்.

அடுத்தாற்போல, ஸிஸிலியிலே ஒரு டங்கர்க் நடக்கும் என்று எதிர் பார்த்தார்கள். ஆனால் அங்கும் நாஜிகள் முந்திக் கொண்டு விட்டார்கள்.

இப்பொழுது இரண்டு இடங்களிலே 'டங்கர்க் நாடகம்' நடப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. கார்ஸிகா என்ற தீவிலே உள்ள ஜெர்மானியரை, சுதந்திர பிரஞ்சுப் படைகள் வெளுத்து வாங்கிக் கொண்டிருக்கின்றன. அங்கே உள்ள முக்யமான நகரங்களை யெல்லாம் இழந்துவிட்டு, ஓடிக்கொண்டிருக்கிறார்களாம் ஜெர்மானியர். இனி அவர்கள் அங்கு நிலைத்து நிற்கமுடியாது. மத்யதரைக் கடலில் தான், நேசதேசத்தாரது ஆதிக்கம் வலுத்துவிட்டதே! அதனால், நாஜிகள், கார்ஸிகாவில் உள்ள ஜெர்மன் படைகளுக்கு எப்படி தைரியமாக மேற்கொண்டு உதவிகளைக் கொண்டு சேர்க்க முடியும்? அங்குள்ள படைகளையாவது வெளியேற்றியாகவேண்டும்.

பாங்கியிலே பணம் நிறைய இருந்தால், எப்படி வேண்டுமானாலும் செலவு செய்யலாம். ஆனால் வரும்படியே இல்லாதபோது, பெட்டியிலும், கையிலும் இருக்கும் களிம்பு பிடித்த காசுகளையும் சுரண்டி எடுக்க வேண்டியது தானே?

இதேமாதிரி ஹிட்லருக்கு ஆள் பிரச்னை பெரும் பிரச்னையாகி வருகிறது. வட ஆப்பிரிக்கப் போரும், ருஷ்யப் போரும் ஏகப்பட்ட ஆட்களை விழுங்கி விட்டன. புதிதாக இத்தாலியிலும், ருஷ்யாவிலும் போராட ஏராளமான ஆட்கள் தேவை. இந்தச் சமயத்திலே கார்ஸிகாவிற்கு ஆள் அனுப்ப முடியுமா? ஆகவே கார்ஸிகாவில் உள்ள ஆட்களில் மிஞ்சியவரை லாபம் என்றெண்ணி, அவர்களை ஹிட்லர் வெளியேற்ற முயலலாம்; அவ்வாறு முயன்றால் அங்கொரு 'டங்கர்க் நாடகம்' நடந்தே தீரும்.

இன்னொரு டங்கர்க் நாடகம் ருஷ்யாவில் உள்ள க்யூபான் தீபகற்பத்திலிருந்து கிரிமியாவிற்குச் செல்ல முயலும் ஜெர்மன் படைகளால் நடிக்கப்படக் கூடும். அந்தப் படைகளை, இதர படைகளிலிருந்து பிரித்து, தொடர்பற்றதாகி விடவேண்டுமென ஸ்டாலின் எண்ணி யிருக்கிறாப்போலிருக்கிறது. அவ்வாறு போட்டுள்ள அவரது திட்டம் வெற்றிகரமாக முடிந்து விட்டால், ஹிட்லருக்கு அது ஒரு பெரிய அடியாகவே இருக்கும். என்ன செய்வது? முதலில் கொடுத்ததை இப்பொழுது வட்டி முதலோடு அவர் திரும்பப் பெற்றேயாக வேண்டும். பிரிட்டிஷாரும் சரி, அமெரிக்கரும் சரி, பிரபல வியாபாரிகள். வாங்கினதைக் கொடுப்பதில் வெகு சிரத்தை உள்ளவர்கள். ஐஸா, பைஸா கூடக் குறையாது கணக்கு தீர்த்து, கொடுத்து விட்டே போவார்கள். ஹிட்லர் வேண்டா மென்றாலும் அவர்கள் விடப்போவதில்லை. தாம் முன்பு கொடுத்தது என்னென்ன என்பது ஹிட்லருக்கு மறந்து போயிருந்தாலும், நேசதேசத்தவர் சரியான ஜாபிதா தயாரித்து வைத்திருப்பார்கள். அந்த ஜாபிதாப்படி எல்லாம் ஹிட்லர் தலைமீது சென்று இறங்கும்போது, 'ஐயோ கடவுளே! இவ்வளவு கொடுத்தேனா நான்?' என்று கேட்டு, இடிந்து போகப் போகிறார் அவர் என்பதில் சந்தேகமே இல்லை.

அங்கும், இங்கும்!

ஆபத்திலும் ஒரு ஆனந்தம்

எவரஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைய எத்தனையோ பேர்கள் இது வரை முயற்சித்திருக்கிறார்கள். ஆனால் எவரும் அந்த முயற்சியில் வெற்றியைக் காண வில்லை. அந்த முயற்சியில் பலர் உயிரையும் இழந்திருக்கிறார்கள். ஆனால், அதற்குப் பின்னால் சென்றவர்கள் கொஞ்சமாவது கலங்கினார்களா? முன்னால் மடிந்தவர்கள் செய்த தவறென்ன என்பதை விசாரித்துத் தெரிந்து கொண்டு, அத் தவறை தாங்கள் செய்யாது, புதுப் பாதைகள் வழியாக மேலே செல்ல முயற்சி எடுத்துக் கொண்டிருந்தனர். எவரஸ்ட் சிகரத்தை எப்படியாவது அடைந்தோம் என்ற பெயர் தமக்கு ஏற்பட வேண்டுமென ஆசை கொண்டவர்கள் பலர் இப்பிரபஞ்சத்தி லிருக்கிறார்கள். இந்த யுத்தம் குறுக்கிட்டு விட்டதால், மேநாட்டவர்கள் இதைக் கவனிக்க முடிய வில்லை. இந்த ஆபத்தான காரியத்தைச் செய்வதிலே அவர்களில் பலருக்கு மகா ஆனந்தம். சிங்கத்தின் வாய்க்குள்ளே தனது தலையை நுழைக்கிறான் சர்க்கஸ்காரன். தனது உயிருக்கே ஆபத்து ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும் என்பதை அவன் அறியாமலில்லை. ஆனாலும் அவ்வாறு ஒரு ஆபத்தான காரியத்தைச் செய்வதிலே அவனுக்கு ஆனந்தம்.

ஒரு குழந்தை நடு ரோட்டிலே போய்க்கொண்டிருக்கிறது. ஒரு ராணுவ லாரி வேகமாக வந்து கொண்டிருக்கிறது. அந்த சமயத்திலே ஒரு மனுஷன் ரோட் டோரத்திலே போய்க் கொண்டிருக்கிறான். தனது உயிரையும் திரணமாக மதித்து, ஒரே பாய்ச்சலில் பாய்ந்து அந்தக் குழந்தையைக் காப்பாற்றத் துணிகிறான். அவ்வாறு துணிந்து செய்யும் பொழுது, சில வேளைகளில் அவன் காய மடையவும் கூடும். பிரக்ஞை இழந்து ஆஸ்பத்திரியில் படுத்திருக்க நேரிடுகையிலும், அவன் தனது சுய உணர்ச்சி பெற்றதும், 'அந்தக் குழந்தை சௌக்யமாயிருக்கிறதா?' என்றே கேட்பான். 'சௌக்யமாயிருக்கிறது' என்ற பதில் கிடைத்தால், அவனது மனம் குதூகலமடையும். தான் செய்த காரியம் வெற்றியாக முடிந்தது என்பதை எண்ணும் பொழுது, அவனுக்கே ஒரு ஆனந்தம் ஏற்படும் அல்லவா?

இந்த மாதிரியே, இப்பொழுது, கணக்கற்ற வாலிபர்கள், நேச தேசத்தாரின் எதிரிகளை, இல்லை! உலக சமாதானத்தைக் குலைத்துக் குட்டிச் சுவராக்கி, எங்கும் ரத்த வெள்ளமாக ஓடச்செய்த சமூக விரோதிகளை, அடித்து ஒடுக்க வேண்டு மெனும் உயரிய நோக்கத் தோடு, அசகாய சூரத்தனமான காரியங்கள் பலவற்றைச் செய்யத் துணிகிறார்கள். அவர்களது முயற்சியின் பயனாக, நமது எதிரிக்கு ஏற்படும் சேதங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

எத்தனை உயிர்கள் தியாகம்!

இப்படிப்பட்ட சூரர்கள் வருகிறார்கள் என்பது தெரிந்து, நமது விரோதிகள், அவர்களைப் பார்த்து சும்மா பிரமித்து நின்று கொண்டிருப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியுமா? அவர்களும் தமது சமர்த்தை யெல்லாம் காட்டி, நம்மவர்களை எதிர்க்கிறார்கள். அடிக்கடி கடும் போர்கள் மூளுகின்றன. ஆனால், தவறாது நம்மவர்களுக்கே வெற்றி ஏற்பட்டு வந்து கொண்டிருக்கிறது. இந்த வெற்றியைப் பெறுவதற்கு எத்தனையோ பேர்கள் தங்கள் அரிய உயிர்களையே தியாகம் செய்திருக்கிறார்கள். எத்தனையோ ஆயுதங்களும், விமானங்களும், வெடிகுண்டுகளும் சேதமடைந்திருக்கின்றன. பலர் மயிரிழை தப்பி உயிர் பிழைத்திருக்கிறார்கள். அவர்களைச் சந்தித்தவர்கள் சொல்லும் விவரங்களைப் பார்த்தால், நமக்கு மயிர்க்கூச்ச லெடுக்கும். ஆனால் அந்த வாலிபர்கள் அடைந்திருக்கும் ஆனந்தத்திற்கு அளவே இல்லை என்று தெரிகிறது.

ஒரு விமான மோட்டி. அவருக்கு இருபத்தி யோரு வயசுதானாகிறது. பிரமாண்டமான தொரு வெலிங்டன் விமானம் அவரது மெல்லிய கைகளுக் கடங்கி, அவரது மனோ பீஷ்டத்திற் கிசைந்து, ஆனந்தமாகப் பறந்து போய்க் கொண்டிருக்கிறது பர்மாவை நோக்கி. தனது படைத்தலைவரிடமும், அதற்கு மேல் உள்ள அதிகாரிகளிடமும், வீர விருதுகளைப் பெற வேண்டுமெனும் ஆசை அவரது இதயத்தில் நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது.

திடீரென்று காற்றும், கன மழையும், இடியும் மின்னலும் எதிர்ப்படுகின்றன. விமானி உஷாராகிறார். மேகங்களுக்குக் கீழே தாழப் பறந்து செல்லலா மென்றாலோ, மலைகளில் மோதி சுக்கு நூறாகிவிடக் கூடிய ஆபத்து எப்பொழுதும் இருக்கும். மேலே போகலா மென்றாலோ வழி தெரியாது போய் விடும்.

தமது இஷ்ட தெய்வங்களை யெல்லாம் பிரார்த்தித்துக் கொண்டு, அங்கு இங்கு திரும்பாது நேரே விமானத்தை ஓட்டுகிறார். நல்ல காலமாக இரு மேகங்களிடையே கொஞ்சம் வெளி இருக்கிறது. அதிலே புகுந்து, அப்பால் சென்று விடுகிறார்.

என்ன ஆனந்தம்! கீழே ரயில்களும், ஜனத்திரளும், லாரிகளும் இருப்பதைப் பார்க்கிறார். அவருடன் சென்ற மனுஷர் சமயம் பார்த்து, குண்டுகளை உதிர்க்கிறார். சற்று முன் வரை வெகு ஷோக்காக இருந்த எஞ்சின் வண்டி எல்லாம் அக்கினி பகவானுக்கு இரையாகி விடுகின்றன. விமானி உத்சாகத்தோடு, வேகமாக இந்திய மண்ணை நோக்கி விமானத்தை ஓட்டி விடுகிறார். இது சமீபத்தில் நடந்த சம்பவம்.

இன்னொரு சமயம், மூன்று பிரிட்டிஷ் விமானிகள், பூ மத்திய ரேகைப் பிரதேசத்திலே ஒரு வெடி விமானத்திலே போய்க் கொண்டிருக்கிறார்கள். விமானத்திற்கு ஆபத்து வந்து விட்டது. கடலில் விழுகிறார்கள் அவர்கள். நல்ல காலமாக அவர்களிடம் ஒரு சிறு ரப்பர் படகு இருந்தது. அதை விரித்து அதில் அந்த மூவரும் ஏறிக்கொண்டார்கள். அலைகளோ வானை எட்டி பிடிக்க முயலுவது போல பிரமாத உயரம் கிளம்பி அமருகின்றன. அதிக உஷ்ணம் காரணமாக நடு நடுவே சுமார் ஆயிரத்தைந்நூறு அடி உயரமுள்ள ஜல ஸ்தம்பங்கள் விர்ரென்று கிளம்பி, பல நிமிஷங்கள் வரை சுழன்று கொண்டே நிற்கின்றன. அதில் படகுகளோ, ஆளோ சிக்கிக் கொண்டால் அதோ கதி தான், நல்ல வேளையாக, மேலே குறிப்பிடப்பட்ட படகு, அந்த ஜல ஸ்தம்பத்தில் சிக்கிக் கொள்ள வில்லை. திடீரென ரப்பர் படகில் ஒரு புறம் 'டர்' என்று கிழிகிறது. ஜலம் உள்ளே பாய்கிறது. வெறி பிடித்தவர்கள் போல, அம்மூவரும் அந்தச் ஜலத்தை வாரி இறைக்கிறார்கள். சரி! நம்மை செலவில் எழுதிக் கொண்டு விட வேண்டியது தான் என்று அவர்கள் எண்ணுகின்றனர். இப்படியே ஒரு ராத்திரி, ஒரு பகல் சமாளித்துக் கொண்டிருந்து விடுகிறார்கள். கைகால்கள் எல்லாம் மரத்துப் போய் விடுகின்றன. நல்ல வேளையாக அந்தச் சமயத்திலே, ஒரு விமானம் அவர்களைப் பார்த்து விட்டுப்போய், 'ஆகாய சமுத்திர பாதுகாப்பு சர்விஸை' சேர்ந்த ஒரு யந்திரப் படகை அழைத்துக் கொண்டு வருகிறது. அந்த மூவரும் உயிர் தப்புகிறார்கள். இதுவும் சமீபத்தில் நடந்தது தான். அவர்களது உடல், களைத்திருந்ததே தவிர, உள்ளம் களைத்திருந்தது என்று நினைக்கிறீர்கள்? ஹூஹூம்! கொஞ்சம் உடம்பில் வலு ஏற்பட்டதும், ஜப்பான்காரனை உதைக்க ஓட வேண்டும் என்று துடித்துக் கொண்டு தானிருக்கும்!

புலி வேட்டை

பெரிய காடுதான். அதிலே ஒரு கொடிய புலி வசிக்கிறது என்பது தெரிகிறது. தம்பட்டங்கள், தாரைகள் எல்லாவற்றையும் உபயோகித்து, அந்தப் புலியை ஒரு சிறு பிரதேசத்திற்குள் கொணர்ந்து மடக்கி விடுகிறார்கள். அங்கே, இரண்டு மூன்று மரங்களின் மீது பரண் கட்டிக்கொண்டு, கண் கொட்டாது, வெகு ஜாக்கிரதையாக, துப்பாக்கிகளில் உள்ள குதிரை மீது வைத்த விரல்களைத் தளரவிடாது சிலர் உட்கார்ந்திருக்கிறார்கள், புதர்களுக்குள் புலி எங்கே பதுங்கிக் கிடக்கிறது என்பது தெரியாது. மகா தந்திரக்காரப் பிராணி ஆயிற்றே அது.

அதை வெளிக் கிளப்ப வேண்டி, ஒரு மரத்திலே ஒரு ஆட்டைக் கட்டிப் போடுகிறார்கள். ராத்திரி வேளை வந்துவிடுகிறது. கண்ணிமைத்தாலும் புலிக்குத் தெரிந்துவிடும். அது மறைவிடத்தை விட்டு வெளியே வராது. வெகு உஷாராகவே இருக்கிறார்கள். ஆட்டின்மீது ஆசை வைத்த புலி மெதுவாக வெளியே தலையைக் காட்டுகிறது. 'டபார்! டபார்! டபார்!' என்ற வெடி சப்தங்களும், புலியின் கர்ஜனையும் அந்தக் காட்டையே குலுக்கி ஆட்டிவிடுகின்றன.

புலிக்கு நல்ல காயம் தான். ஆனாலும் உடனே கீழே இறங்கி வந்து அதைப் பிடித்து, தோள் மீது போட்டுக்கொண்டு, போட்டோ பிடித்துக் கொள்ளப் போய்விட முடியுமா? பேசப்படாது. சும்மா இருக்கும் புலியை விட, காயம்பட்ட புலிதான் வெகு ரோஷத்தோடு இருக்கும். திடீரென்று பத்து இருபதடி உயரம் கூட எழும்பி விழுமாம் அது. அப்பொழுது அதனிடம் யாராவது சிக்கிக்கொண்டால், அவர்கள் பாடு வைகுண்ட யாத்திரை என்பதில் சந்தேகமே இல்லை.

அதனால், புலியின் உயிர் பூராவாக அதன் உடலை விட்டுப் போகும் வரை, அதை அடித்தே தீரவேண்டும். அப்புறம் தான் அதைத் தொடலாம். அதன் தோலை உரித்து, ஆசனமாகப் போட்டுக்கொள்ளலாம். அது இல்லாவிட்டால் வேறு எது வேண்டுமானாலும் செய்யலாம்.

அதேபோல, ஹிட்லரும் சரி, டோஜோவும் சரி, ஜெர்மானியரும் சரி, ஜப்பானியரும் சரி, அடிபட்ட புலிகளைப் போலவே இருக்கிறார்கள். ஆகவே, இனித்தான் வெகு உஷாராக அவர்களோடு போரை நடத்த வேண்டியிருக்கும்.

ருஷ்யாவிலே ஜெர்மானியருக்கு ஏற்பட்டுள்ள தோல்விக்கு ஈடான தோல்வியை, சரித்திர ஆரம்பகாலத்தி லிருந்தே எவரும் அடைந்ததே இல்லை. ருஷ்யர்கள் ஜெர்மானியரைத் துரத்திக் கொண்டே வெள்ளை ருஷ்யாவிற்குள் கூட நுழைந்து விட்டார்கள். தெற்கே நீப்பர் நதிக்கு இருபுறங்களிலும் ஜெர்மானியரும், ருஷ்யரும் பலமாகக் குந்திக் கொண்டு பயங்கரமான பீரங்கிப் போர்களை நடத்திக் கொண்டிருக்கிறார்களாம். மேல்கரையில் ஜெர்மானியர் இருக்கும் இடம் உயரமாக இருப்பதால், அவர்களுக்குச் சிறிது அனுகூலமாகவே இருக்கிறதாம்.

கீயப் நகருக்குமேலே கடும் விமானப் போர்கள் நடக்கின்றனவாம். கீயபுக்கும், ஸ்மாலென்ஸ்கிற்கும் நடுவே உள்ள முக்ய ஜங்ஷன் நகரமான கோமெலைப் பிடிக்க ருஷ்யர்கள் முயற்சிக்கிறார்கள்.

தெற்கே கிரிமியாவிற்கு அருகே ஜெர்மானியர் பல இடங்களைக் காலி செய்து கொண்டிருக்கிறார்களாம். இந்தச் சமயத்திலே, ஜெர்மானியருக்குச் சாதகமாக, கனமழை பொழியத் தொடங்கிவிட்டதாம்.

இத்தனை நாட்களாகச் சேர்த்து வைத்திருந்த டாங்கிகளையும், விமானங்களையும் ஹிட்லர் திடீரென்று யுத்த களத்திற்கு அனுப்பியிருக்கிறாராம். அதனால் ருஷ்யர்களுக்கு எதிர்ப்பு அதிகரித்து வருகிறதாம்.

எல்லாப் போர்முனைகளி லிருந்தும் எழவு செய்திகள் ஏகமாக வந்து குவிந்து கொண்டிருப்பதால், கொப்பல்ஸ் துரை ஜெர்மன் மக்களுக்கு அச்செய்திகளை நாசூக்காக எடுத்துச்சொல்ல முயன்று வருகிறார். 'இது தேவலையே! இன்னும் மோசமான செய்திகள் வராதிருக்க பகவான் தான் அருளவேண்டும்' என்று கூடச் சொல்லியிருப்பார் போலிருக்கிறது அவர்.

ருஷ்யாவிலிருந்து ஜெர்மன் வீரர்களைப் பின்வாங்கச் சொல்வதன் மர்மத்தை கொப்பல்ஸ் துரை வெளியிட்டிருக்கிறார். ருஷ்யாவிலே அகலக்கால் வைத்துவிட்டதை வேறு பாஷையிலே ஒப்புக்கொண்டு, ஜெர்மன் முன்னணியின் அகலத்தைக் குறுக்கி, அப்புறம் பலத்தை யெல்லாம் காட்டி ஒரே அடியாக அடிக்கப் போகிறோம் என்கிறாராம் அவர்.

ஜெர்மானிய நீர் மூழ்கிகள் மறுபடியும் அட்லாண்டிக் சமுத்திரத்திலே தொல்லையை விளைவிக்கத் தொடங்கி விட்டனவாம். இப்பொழுது அவற்றிலே, மிகக் கடுமையான டார்பீடோ வெடிகள் இருக்கின்றனவாம். தவிர, ஜல மட்டத்திற்கு மேலேயே தைரியமாக நின்று விமானங்களை எதிர்ப்பதற் கென்றே, அவற்றில் விமான எதிர்ப்பு பீரங்கிகள் பல வைக்கப்பட் டிருக்கின்றனவாம்.

சென்ற சில தினங்களுக் குள்ளாகவே பல நேச தேசக் கப்பல்களை நாஜி நீர் மூழ்கிகள் மூழ்கடித்திருக்கின்றன. இன்னும் பல கடற் போர்களும் நடந்து கொண்டிருக்கின்றனவாம்.

நார்வேயில் ஏராளமான ஆட்களை அனுப்பி, விமானக் கூடங்களையும் கடற்கரைகளையும் ஹிட்லர் பலப்படுத்தச் சொல்லி யிருக்கிறாராம்.

(7-ம் பக்கம் பார்க்க.)

யுத்த நாட் குறிப்புகள்

பிரிட்டனும் ஜெர்மனியும்

செப்டெம்பர் 29.—கூடிய சீக்கிரத்தில், யுத்தம் முடிந்த பிறகு விமானப் போக்கு வரவுகள் எப்படி அமைய வேண்டு மென்பது பற்றி, கலந்து ஆலோசிக்கும் பொருட்டு லண்டனில் ஒரு மகா நாடு நடைபெறும். அதில், பிரிட்டனும் மற்ற குடியேற்ற நாடுகளும் கலந்து கொள்ளும்.

செப்டெம்பர் 30.—ஜெர்மனியைச் சேர்ந்த ரூர் பிரதேசத்தில் உள்ள போச்சும் என்னும் நிலக்கரி தளத்தை பிரிட்டிஷ் விமானப் படைகள் தாக்கி சாம்பலாக்கின.

அமெரிக்க ஐக்கிய மாகாண யுத்த உற்பத்தி போர்டு தலைவர், லண்டனில் நடை பெற்ற தோர் கூட்டத்தில், உற்பத்தியில் அனைவரும் ஈடுபட வேண்டிய அவசியத்தை வற்புறுத்திப் பேசினர்.

அக்டோபர் 1.—வடாப்பிரிக்காவி லிருந்து கோட்டை விமானங்கள் கிளம்பி வந்து மியூனிச் நகரத்தின் மீது வெடி குண்டுகளை வீசின.

அக்டோபர் 2.—ஹேகனும், எம்டனும் தாக்கப்பட்டன. ரைன்லந்து மீதும் வெஸ்ட்பேபியா மீதும் பிரிட்டிஷ் வெடி குண்டு விமானங்கள் வட்டமிட்டன.

அக்டோபர் 3.—லண்டனில் விமான அறிவிப்பு சங்கு ஊதியது. உடனே விமான எதிர்ப்புப் பீரங்கிகள் போராடக் கிளம்பின. இங்கிலாந்திற்குக் கிழக்கிலும் தென் கிழக்கிலும் ஒரு சில எதிரி விமானங்கள் பறந்தன.

மியூனிச் மீண்டும் தாக்கப்பட்டது. ரூரும் ரைன்லந்தும் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன.

அக்டோபர் 4.—மத்திய ஜெர்மனியிலுள்ள காசெல் என்னுமிடம் யுத்தத் தொழிற் சாலைகள் மிகவும் உள்ளது. அதை நேற்றிரவு பிரிட்டிஷ் விமானப் படை மிகக் கடுமையாகத் தாக்கியது. பெருஞ் சேத மேற்பட்டது. படையெடுத்துப் போன விமானங்களில் 24 வெடி குண்டு விமானங்கள் தம் தளங்களுக்குத் திரும்பவில்லை. அன்றியும் ரைன்லான்டையும் ஹானோவரையும் தாக்கின. எதிரி கடல்களில் கடற் கண்ணிகள் அமைக்கப்பட்டன.

ப்ராங்க்பர்ட் என்னு மிடத்தை அமெரிக்க வெடி குண்டு விமானங்கள் தாக்கின.

கடும் நோய் காரணமாக, கப்பற் படைத் தலைவரான சர் டட்லி பௌண்ட் தன் பதவியை ராஜிநாமாச் செய்து விட்டார். அவருக்குப் பதிலாக சர் அன்ட்ரூ கன்னிங்ஹாம் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அக்டோபர் 5.—அரசாங்க ஆலோசனையின் பொருட்டு அழைக்கப்பட்டிருந்த பீல்ட்மார்ஷல் ஸ்மட்ஸ் இன்று லண்டன் வந்து சேர்ந்தார்.

ஈஸ்ட் ஆங்கிலியாவில் எதிரிகள் சற்று தலைகாட்டினார்கள்.

அமெரிக்காவும் அத்லாண்டிக்கும்

செப்டெம்பர் 29.—அமெரிக்க காங்கிரஸ் (அரசாங்க) சபையின் முக்கிய அங்கத்தினர்களான மிஸ்டர் சாம்ரேபர்ன், செனெடர் ஆலன், மிஸ்டர் டபுள்யூ. பர்கவி, மிஸ்டர் ஜான் மக்போர் . மாக், உப தலைவர் ஹென்ரி வாலஸ் ஆகியவர்களோடு, ஆள் பலத்தைக் குறித்தும், யுத்தத்திற்குப் பிறகு எற்படக் கூடிய பிரச்சினைகளைக் குறித்தும் அமெரிக்கத் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்ட் விவாதித்தார்.

நேச நாடுகளுக்குக் குத்தகைக் கடன் சட்டப்படி, சென்ற ஆகஸ்டு மாதத்தோடு 162 கோடியே 10 லட்சம் டாலர்கள் கணக்காகி யிருக்கிறதென்றும், இவ்வளவு பெருந் தொகை ஒரு போதும் நிலுவை நின்றதில்லை யென்றும், அமெரிக்கத் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்ட் குறிப்பிட்டார்.

ஜெனரல் ஜார்ஜ் மார்ஷல் சம்பந்தமாக வெளி வந்துலவும் செய்திகளை அவர் மறுத்தார்.

பசிபிக் யுத்தக் கௌன்சில் கூட்ட மொன்றை மிஸ்டர் ரூஸ்வெல்ட் நடத்தினர்.

யுத்த இலாக்கா விஷயங்களிலோ, படைத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்திலோ, தலைவர் ரூஸ்வெல்ட் தலையிடுவ தில்லை யென்று அமெரிக்க யுத்த மந்திரி மிஸ்டர் ஸ்டிம்ஸன் அறிவித்தார்.

அமெரிக்க மந்திரியான மிஸ்டர் கார்டெல் ஹல், தான் மூவரசு மகாநாட்டுக்கு நிச்சயமாகப் போவதாகவும், அம் மகாநாடு மாஸ்கோவில் கூடுவதற்குப் பதிலாக லண்டனில் கூடு மென்றும் அறிவித்தார்.

செப்டெம்பர் 30.—அமெரிக்காவின் கப்பற் கட்டுந் தளங்களிலிருந்து 17 வியாபாரக் கப்பல்கள் வெளிப்பட்டன.

அக்டோபர் 1.—யுத்தத்திற்குப் பிறகு நேச நாடுகளெல்லாம் சுதந்தரத்தில் பங்கு கொள்ளும் என்று மிஸ்டர் ரூஸ்வெல்ட் குறிப்பிட்டார்.

குத்தகைக் கடன் நிர்வாகியான மிஸ்டர் எ. ஹாரிமன், அமெரிக்கப் பிரதிநிதியாக ரஷ்யாவிற்கு அனுப்பப்படுவார்.

அக்டோபர் 2.—உள் நாட்டு விஷயங்களிலும் வெளி நாட்டு விஷயங்களிலும் தன் கொள்கைப்படி குடியாட்சிக் கட்சியினர் நடக்கச் சம்மதிப்பார்களானல், அமெரிக்கத் தலைவர் தேர்தலில் தான் போட்டியிட மீண்டும் விரும்புவதாக மிஸ்டர் வின்டெல் வில்கி குறிப்பிட்டார்.

சமீபத்தில் நடை பெற்ற ஒரு கடற் போரில், மூன்று நேச நாட்டுப் படைக் கப்பல்கள் மூழ்கின.

ஒரு ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல் ஒரு ப்ரேஸிலியக் கப்பலை வெடி குண்டுகளால் தாக்கியது.

அக்டோபர் 3.—யுத்தத்தின் போக்கை உடனடியாக பாதிக்கக் கூடிய விஷயங்களைக் குறித்தும், கடைசியாக ஏற்படக் கூடிய சமரச நிபந்தனைகள் எவை என்பது பற்றியும் அமெரிக்க அரசாங்க சபையின் இரகசியக் கூட்டத்தின் முன் சமர்ப்பிக்கப்படும்.

பெர்ல் துறைமுகம் தாக்கப்பட்ட போது ஹாவாயி லிருந்த உத்தியோகஸ்தர்களைக் குறித்த விசாரணை, தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

அக்டோபர் 4.—சோவியத் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கும் தோழர் க்ரோமிக்கோ இன்று தன் அதிகாரப் பத்திரங்களை மிஸ்டர் ரூஸ்வெல்ட்டிடம் சமர்ப்பித்தார்.

இந்தியா, பர்மா, இலங்கை

செப்டெம்பர் 29.—10-ம் நம்பர் அமெரிக்க விமானப் படையைச் சேர்ந்த வெடி குண்டு விமானங்கள் மியோதா, மகாக், டன்டபின் ஆகிய ரயில்வே ஸ்தாபனங்களைத் தாக்கின.

செப்டெம்பர் 30.—சிலோன் ராயல் நேவல் வாலின்டியர் ரிசர்வ் படை, நாளையிலிருந்து பிரிட்டிஷ் கப்பற் படையின் ஒரு பகுதியாக மாறுகிறது.

பக்கோக்கு என்னுமிடத்திலுள்ள யனபா, சாங்க், பாரக் என்னும் பகுதிகளிலிருக்கும் எண்ணெய் சுத்தம் செய்யப்படும் சாலைகளை பிரிட்டிஷ் விமானப் படைகள் தாக்கின.

அக்டோபர் 2.—மரங்குவா, ஆலன் என்னுமிடங்களை பிரிட்டிஷ் வெடி குண்டு விமானங்கள் தாக்கின. மியிங்கின் என்னுமிடத்தில் ஒரு பெரிய ஜப்பானியக் கப்பலை பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த "போபைட்டர்ஸ்" விமானங்கள் தாக்கின. காங்கப்பிலுள்ள எதிரி ஸ்தாபனங்களும் தாக்குண்டன.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல்

செப்டெம்பர் 29.—நேப்பிள்ஸ் நகரத்தைச் சார்ந்த சம பூமிக்குள் 5-ம் படைகள் புகுந்து விட்டன. சாரென்டோ தீபகற்பம் முழுவதும் இப்போது நேச நாட்டினர் வசமிருக்கிறது. எட்ரியாடிக் கடற்கரையிலுள்ள சப்பனெட்டா என்னும் துறைமுகப் பட்டினத்தை 8-ம் படையினர் கைப்பற்றிக் கொண்டனர். காஸ்டெல்லாமீர், லியோனி, நொசீரா ஆகிய இடங்களை நேசநாட்டினர் கைப்பற்றிக் கொண்டனர். மான்டீரோ, பாரனிசாய் என்னுமிடங்களை ஜெர்மானியர்கள் காலி செய்து விட்டனர். தோற்றுப் போன எதிரியின் நிலைமையில் இத்தாலி இப்போது இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

க்ரீஸிலும், எஜியனிலும் உள்ள விமான நிலையங்களை பிரிட்டிஷ் விமானப் படை தாக்கியது. கார்சிகாவைச் சேர்ந்த பீடிக்ரோசி மீட்சி பெற்றது.

(6-ம் பக்கம் தொடர்ச்சி.)

இத்தாலியிலே நேச தேசப் படைகள் போன வாரம் பாகியா என்ற பெரிய விமானக் கூடத்தையும், சௌந்தரிய மிகுந்த நேபில்ஸ் நகரத்தையும் கைப்பற்றிக் கொண்டு விட்டன. ஒரு பெரிய படை, இத்தாலியின் கீழக் கரையிலே சற்று வட பக்கமாக முன்னே கடல் வழியாகப் போய் இறங்கி விட்டதாம். அதோடு எட்டாம் படையும் சேர்ந்து கொண்டு விட்டதாம்.

நேச தேசத்தாருக்கு ஆகாயத்திலும், கடலிலும் ஆதிக்கம் ஏற்பட்டு விட்டதை இது நன்ருக எடுத்துக் காட்டவில்லையா? தவளை போல் தாவித் தாவிக் குதிக்கும் இம்முறையை நேச தேசப் படைகள் கையாண்டால், ஹிட்லரின் படைகள் திணறிப் போகும் என்பதில் சந்தேகம் இடையாது.

அடுத்தாற் போல ரோமாபுரியைப் பிடிக்கவே பெரிய போர் நடக்கும். ரோமாபுரி அதனல் அழியக் கூடும். அதற்கு நேச தேசத்தவர் ஜவாப்தாரிகளாக இருக்க முடியாது என்றும், ஜெர்மானியரே அதற்குக் காரணஸ்தர்களாக இருப்பார்கள் என்றும் ரூஸ்வெல்ட் தெரிவித்து விட்டார்.

ரோமாபுரி இருந்தால் என்ன, போனல் என்ன, ஜெர்மனியை நேச தேசத்தார் அணுகாதிருந்தால் சரி, என்று தான் ஹிட்லர் எண்ணியிருப்பார்.

நேபில்ஸ் நகரம் எவ்வளவு அழகான நகரம்! பண்டைய கட்டிடங்கள் பல நிறைந்த அந்நகரத்தை பாழ் நரக மாக்கிவிட்டுப் பறந்தோடினர்களாம் ஜெர்மானியர். அங்கே இடியாத வீடுகள் உள்ள தெரு ஒன்றே ஒன்று தானிருக்கிறதாம். அந்த ஊரிலே கூட நாஸிகள் நின்று போராடிப் பார்த்திருப்பார்கள். ஆனல் தேசாபிமானம் மிக்க இத்தாலிய பொது உடமைக் கட்சியினர் திடீரென்று கலகம் செய்ய ஆரம்பித்தார்களாம். இனி இங்கிருப்பது ஆபத்து என்று ஜெர்மன் படையை அவ்வூரை விட்டு வெளியேறச் சொல்லிட்டாராம் சேனபதி கெஸல்ரிங்.

இத்தாலியிலே ஜெர்மானியர் இருந்து போராடுவ தெல்லாம், நேச தேசத்தார் ஜெர்மனியை எவ்வளவு காலம் அணுகாதிருக்கச் செய்ய முடியுமோ, அவ்வளவு காலம் தடைப்படுத்திப் பார்த்து விடலாம் என்ற நோக்கத்துடன் தான், என்று தெரிகிறது.

பிரான்ஸிலே உள்ள ஜெர்மானியருக்கும் சங்கடங்கள் பல ஏற்பட்டு வருகின்றனவாம். நேச தேச விமானிகள் போடுகிற போடுகள் ஒரு புறமிருக்க, சுதந்திர வேட்கை கொண்ட பிரஞ்சுக்காரர்கள் பலர் ரகசியமாகச் செய்யும் காரியங்கள் அவர்களை வாதைப் படுத்துகின்றன. அங்கே ஆட்களைச் சேர்க்க சென்றிருந்த ஒரு ஜெர்மன் தலைவரது கழுத்தை அவர்களில் ஒருவர் சீவி எறிந்து விட்டாராம். அதற்காக, நிரபராதிகளான பல பெண்களையும் குழந்தைகளையும் நாஸிகள் சுட்டுத் தள்ளி விட்டார்களாம்.

பிரான்ஸிலே சென்ற மூன்று வருஷங்களிலே நாற்பதாயிரம் பேர்களை இவ்வாறு நமனுலகிற்கு அனுப்பி யிருக்கிறார்களாம். பதினேழு லக்ஷம் பேர்களை ஜெர்மனியில் கட்டாய வேலை செய்ய அனுப்பி விட்டார்களாம். இதைப் போல எத்தனையோ அக்ரமங்கள் தான் செய்து கொண்டிருக்கிறார்கள் அவர்கள். இதற்கெல்லாம் நம்மவர்கள் அவர்களைச் சும்மா விட்டு விடப் போகிறார்களா என்ன?

போன செப்டெம்பர் மாதத்தில் மட்டும் முப்பத்தி ஏழாயிரம் டன் எடையுள்ள குண்டுகளை அச்சு நாட்டார் உள்ள இடங்களில் எல்லாம் வீசியிருக்கிறார்கள். இன்னும் இம்மாதிரி 'அக்ஷதைகளை' லக்ஷம் டன் கணக்கில் நேச தேசத்தார் உதிர்க்கச் சித்தமா யிருக்கிறார்கள். இனி ஹிட்லரோ, அவரது கொள்கையோ தலை தப்புவது மகா கடினம்.

புதிய பாசிஸ்ட் குடியாட்சி அரசாங்கத்தின் மந்திரி சபையில் முசோலினி ஒரு பிரசங்கம் செய்தார்.

பாரி என்னும் நகரந் தான் தற்போதைக்கு படாக்ளியோ அரசாங்கத்தின் தலை நகரமாக விருக்கு மென்று அறிவிக்கப்படுகிறது.

செப்டெம்பர் 30.—நேப்பில்ஸ் நகரத்தின் எல்லைப் புரப் பகுதிகளை நேச நாட்டுப் படைகள் அடுத்து விட்டன. இந்நகரத்தை அடியோடு நாசஞ் செய்த பிறகு, அதை ஜெர்மானியர்கள் கைவிட்டு விட்டார்களென்ற செய்தி எட்டுகிறது.

மால்டாவிலுள்ள கப்பல்களி லிருக்கும் படைகள் எப்படி ஒத்துழைக்க வேண்டு மென்பது பற்றி ஜெனரல் எய்சினோவரும் மார்ஷல் படாக்ளியோவும் கலந்து பேசினார்கள்.

அக்டோபர் 1.—5-ம் படை நேப்பில்ஸ் நகரத்திற்குள் புகுந்து விட்டது. ஜெர்மானியர் ஒருவர் கூட அங்கே கிடையாது. பாரி அருண்சியாடா என்னு மிடங்களையும் நேச நாடுகள் கைப்பற்றி விட்டன.

பாஸ்டியாவிலுள்ள அரண்களை விட்டுவிட்டு ஜெர்மானியர்கள் ஓட்டமெடுக்க வேண்டிய அவசிய நிலைமை ஏற்பட்டது.

அக்டோபர் 2.—சான்சிவெரோ, ல்யூசிரா, கர்கானோ ஆகிய இடங்களை 8-ம் படை கைப்பற்றிக் கொண்டது. ரோபஸ் தீவுகளிலுள்ள முக்கியமான இடங்கள் தாக்கப்பட்டன. ரோமாபுரியை நோக்கி நேச நாட்டுப் படைகள் முன்னேறிக் கொண்டிக்கின்றன.

கூடிய விரைவில் இத்தாலியில் ஒரு கடுமையான யுத்தம் நடைபெறப் போகிற தென்று யுத்த உதவி மந்திரி மிஸ்டர் ராபர்ட் பி. பாட்டர்ஸன் குறிப்பிட்டார்.

அக்டோபர் 3.—பெனிவென்டோவையும், ப்ரிஜென்டோவையும் நேசநாட்டுப் படைகள் கைப்பற்றிக்-கொண்டன. ரோமாபுரியை நோக்கிப் பின் வாங்கிக் கொண்டிருக்கும் ஜெர்மன் படைகளை 5-ம் படை விரட்டித் துன்பப்படுத்திக் கொண்டிருக்கிறது.

மீண்டும் ஒரு அரசாங்கத்தை அமைக்க முசோலினி முயற்சிப்பதை இத்தாலிய மன்னர் இம்மானுவேல், தன் வானொலிப் பிரசங்கத்தில் கண்டிக்கிறார்.

பாஸ்டியாவின் கேந்திரஸ்தானமான டானகம் குன்றை பிரஞ்சுப் படைகள் கைப்பற்றின.

கோஸ் மீது விமானங்களைக் கொண்டும் தரைப் படைகளைக் கொண்டும் ஜெர்மானியர்கள் தாக்கினார்கள்.

அக்டோபர் 4.—டெர்மோலி என்னும் துறைமுகத்தை யடுத்து எட்டாம் படை இறங்கி யிருப்பதாகத் தெரிகிறது. இங்கே அநேக ஜெர்மானியர்கள் கைதியாயினர்.

மோட்டா, மாண்டிமிலெட்டோ என்னும் இடங்கள் கைப்பற்றப் பட்டன.

பெனிவென்டோவிற்கு வடக்கே கலோர் ஆற்றை நேச நாட்டுப் படைகள் கடந்து விட்டன. ஜெனரல் அலெக்சாந்தரின் இடுக்கிப் படைகள் இரண்டும் ரோமாபுரிக்கு 120 மைலுக்கு அப்பாலும் 150 மைலுக்கு அப்பாலும் இருக்கின்றன.

ரோமாபுரிக்கு அப்பால் சிவிட்டாவாக்ச்சியி என்னும் ரயில்வே ஸ்டேஷனையும் எண்ணெய் டாங்கிகளையும் நேச தேச விமானங்கள் வெடி குண்டுகளை எறிந்து தாக்கி நாசம் செய்தன.

அல்பேனியாவில் இத்தாலியப் படைகளுக்குத் தலைவரான ஜெனரல் அமிகோவையும், சாலெர்னோ பாதுகாப்புப் படைத் தலைவரான ஜெனரல் கான்சகா, மிலான் தொழிற் சங்கத் தலைவரான கியோவென்னி ரொவேடா ஆகியோர்களை ஜெர்மானியர்கள் சுட்டுக் கொன்று விட்டனர்.

அக்டோபர் 5.—வால்டர்னோ லைனிலிருந்து ஜெர்மன் படைகள் வடக்கே பின்வாங்கிக் கொண்டிருக்கின்றன. பார்தலாமியோ, பொமிக்லியானட், கபோடிசினோ, மான்டிசார்ச்சியோ ஆகிய இடங்கள் கைப்பற்றப் பட்டன. ஜெர்மன் படைகளின் இருபுரங்களிலும் நேசநாட்டுப் படைகள் நெருக்குகின்றன.

கார்சிக்காவில் நடைபெற்ற போராட்டம் ஏறக்குறைய முடிந்துவிட்டதென்று சொல்லலாம்.

தன் ஆட்சியை, ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்க விரும்புவதாக, படாக்ளியோ தெரிவித்தார்.

பால்கனைத் தாக்க ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. படைகள் திரட்டப் படுகின்றன.

ரஷ்யாவும் பின்லாந்தும்

செப்டெம்பர் 29.—கோமலில் கடுமையான போராட்டம் நடைபெற்றது. க்ரெமென்சுக், டார்னிட்சா, வட்கா ஆகிய ஊர்களை செம்படைகள் கைப்பற்றியது மட்டு மன்றி, 1600 இடங்களையும் கைப்பற்றிக் கொண்டார்கள்.

செப்டெம்பர் 30.—ஜெர்மானியர்களின் மத்தியப் போர்முனையைத் தவிடு பொடியாக்க வேண்டி, அங்குள்ள 200 மைல் நீளமுள்ள போர்முனையின் கேந்திர ஸ்தானங்களி லெல்லாம், பலமான படைகளைத் ரஷ்யர்கள் திரட்டி வைத்திருக்கின்றனர். எல்லாப் போர்முனைகளிலும் செம்படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. க்ரிச்சேயும் மற்றும் 170 இடங்களும் கைப்பற்றப்பட்டன.

அக்டோபர் 1.—வெள்ளை ரஷ்யாவிற்காக நடை பெறும் போராட்டம் நெருக்கடியானதோர் நிலைமையை அடைந்து கொண்டிருக்கிறது.

விடெப்ஸ்கை நோக்கி செம்படைகள் முன்னேறிக்கொண்டு போகும் போது, ஜெர்மன் படைகள் பின்வாங்கின.

கோமலில் நாஜிப் படைகள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு போராடின. கியபுக்கு அருகில் கடுமையான போராட்டம் நடைபெற்றது. சுகோப்பும் 340 இடங்களும் ரஷ்யர்களால் கைப்பற்றப்பட்டன.

அக்டோபர் 2.—எல்லாப் போர்முனைகளிலும் ஜெர்மானியர்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள். இருதரப்பாரும் மகா கடுமையாக பீரங்கிகளைக் கொண்டு போராடினார்கள் என்று தகவல் கிடைத்திருக்கிறது.

அக்டோபர் 3.—தாமான் தீபகற்பத்தை ஜெர்மானியர்கள் காலி செய்து விட்டனர்.

வெள்ளை ரஷ்யாவில் செம்படைகள் முன்னேற்றம் திருப்திகரமாயிருக்கிறது.

ரஷ்யாவி லிருந்து ஜெர்மானியர்கள் ஏன் பின் வாங்குகிறார்களென்று டாக்டர் கோப்பெல்ஸ் தன் வானொலிப் பிரசங்கத்தில் விளக்கிக் கூறினார்.

அக்டோபர் 4.—விடெப்ஸ்க், மோகிலேப், கோமெல் ஆகியவை வெள்ளை ரஷ்யாவிலுள்ள 3 கொத்தளங்கள். அவற்றை நோக்கி செம்படைகள் வந்து கொண்டிருக்கின்றன. இங்கே சென்ற சில நாட்களில் மட்டும் 15,000 ஜெர்மானியர்கள் கொல்லப்பட்டனர். மோகிலேப், கோமெல் பகுதிகளில் சென்ற 24 மணி நேரத்தில் 6 மைல் தூரம் முன்னேறி 24 இடங்களை செம் படைகள் பிடித்துவிட்டன.

மின்ஸ்க்குக்கு அருகில் 8 மைல் தூரத்திற்கு ரஷ்ய கொரில்லாப் படைகள் தண்டவாளங்களை அகற்றிவிட்டன.

மெலிடாபோல் என்னும் ரயில்வே ஜங்ஷனை, ரஷ்ய விமானப் படை தாக்கியது.

அக்டோபர் 5.—ஓய்ட் ரஷ்யாவில் ஜெர்மானியர் அமைத்திருந்த அரண்களைத் துளைத்துக்கொண்டு ரஷ்யப் படைகள் முன்னேறின.

ஜெர்மானியர்களின் மூன்று கொத்தளங்களான கோமல், மோகிலேப், விடெப்ஸ்க் ஆகியவை கொடுந் துன்பத்திற்குள்ளாயின.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரிகள் கைப்பற்றிய நாடுகள்

செப்டெம்பர் 29.—ஹங்கேரிய எல்லைப்புரத்திலும் ருமேனிய எல்லைப் புரத்திலும் உள்ள காவற் படையினர்களுக்குள் போர் மூண்டு கொண்டது.

செப்டெம்பர் 30.—பிரான்சிலும் ஹாலந்திலுமுள்ள எதிரி போக்கு வரவு சாதனங்களை பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த வெடி குண்டு விமானங்கள் வெடி குண்டுகளால் தாக்கி நாசப் படுத்தின.

யுக்கோஸ்லாவியாவின் உள்நாட்டிலுள்ள வேற்றுமைகளைப் போக்க, தன்னாலும் தன் அரசாங்கத்தாலும் இப்போது முடியவில்லை யென்றும், என்றாலும், தம் நாட்டின் பொது நன்மையை முன்னிட்டே உழைத்து வருவதாகவும், அந்நாட்டு மன்னர் பீட்டர் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

யுக்கோஸ்லாவிய நாடு முழுதும் உள்ள முக்கியமான கேந்திர ஸ்தானங்களி லெல்லாம் தேச பக்தர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் கடும் போர் நடக்கிறது.

ருமேனியத் தொழிலாளிக ளிடையே கலவரம் பரவி விட்டது. அவர்களுக்கு அதிகக் கூலி கொடுப்பதாகக் கூறியுங் கூட, கருங்கடற் கரையை யடுத்து அரண்கள் கட்டுவதற்கு வர முடியாதென்று மறுத்து விட்டார்கள்.

அக்டோபர் 1.—வெள்ளை ரஷ்யாவில் போலீஸ் வேலை பார்ப்பதற்கு ஹங்கேரியப் படைகளை அனுப்புமாறு ஹங்கேரிக்கு ஹிட்லர் கட்டளை யனுப்பினார். ஆனால் அனுப்ப ஹங்கேரி மறுத்து விட்டது.

அக்டோபர் 2.—ருமேனியா மீது பிரிட்டிஷ் விமானப் படைகள் பறந்தன.

அக்டோபர் 3.—ஒன்ஸ்டார்ட், ஹாம்ஸ்டார்ட், ஆம்ஸ்டெர்டாம் சிப்பால் என்னும் பாரீசைச் சேர்ந்த விமான தளங்களை, நேசநாட்டு வெடி குண்டு விமானங்கள் தாக்கின.

நடுநிலைமை நாடுகள்

செப்டெம்பர் 30.—665 அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்று ஸ்பெய்ன் அரசாங்கம் முடிவு கட்டியது.

அக்டோபர் 2.—ஸ்வித்சர்லந்துக்கு மேலே, ஜெர்மன் போர் விமானங்களுக்கும், அமெரிக்க விமானக் கோட்டைகளுக்கும் நடைபெற்ற போராட்டத்தின் போது, சுவித்ஸர்லாந்தின் விமான எதிர்ப்பு பீரங்கிகளுக்கு, அமெரிக்க விமானக் கோட்டை யொன்று இரையானது.

மகா மேன்மை தங்கிய அமீர் பைசலும், அவருடைய சகோதரரும் மற்ற அராபிய கோஷ்டி யங்கத்தினர்களும் வாஷிங்டன் வந்து சேர்ந்தார்கள்.

கீழக்கோடி நாடுகள்

செப்டெம்பர் 29.—மானஸ், லூக்கா, முண்டா தீவுகளை நேசநாட்டு விமானங்கள் வெடி குண்டுகளால் தாக்கின. விவா கடுமையாகத் தாக்கப்பட்டது. அநேக மத்ய ஸ்தானங்களி லிருந்த படகுகள் அடிபட்டன. சாலமன் தீவுகளிலுள்ள அநேக இடங்கள் வெடி குண்டுகளால் தாக்கப் பட்டன.

பூ ஆற்றின் கீழ் கரையில் கடுமையான யுத்தம் நடை பெற்றுக்கொண்டிருக்கிறது. டாங்கிங்குக்கு அப்பால் ஒரு ஜப்பானிய டாங்கர் மூழ்கடிக்கப் பட்டது.

செப்டெம்பர் 30.—பசிபிக் போர் முனைகளில் அமெரிக்காவோடு ஒத்துழைக்கும் பொருட்டு, பிரிட்டிஷ் கப்பற் படையும் விமானப் படையும் அமெரிக்க உத்தியோகஸ்தர்களோடு விரைவில் ஆஸ்திரேலியா வந்து சேரும்.

அக்டோபர் 1.—கொலம்பங்கராவைக் காலி செய்ய ஜப்பானியர்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அக்டோபர் 2.—சாலமன் தீவுகளின் வட புரத்தில், ஒரு ஜப்பான் நாசகாரிக் கப்பலும் இரண்டு வியாபாரக் கப்பல்களும் ஒரு ஜப்பானிய நீர்மூழ்கிக் கப்பலும் மூழ்கடிக்கப்பட்டன.

இந்தோ சீனாவைச் சேர்ந்த ஹைபாங் என்னும் துறைமுகத்தை, சீனாவிலிருந்து அமெரிக்க விமானப் படை வந்து தாக்கியது.

அக்டோபர் 3.—பின்ஸ்சேபன் கைப்பற்றப்பட்டது.

அக்டோபர் 4.—போர்டோ பகுதியில் ஆஸ்திரேலிய விமானப் படை ஒரு ஜங்கர் கப்பலையும் 3 எதிரி பாரா கப்பல்களையும் நாசமாக்கின.

ஜெனரல் ஹெர்ரிங்கின் பிரதம உத்தியோகஸ்தரான ப்ரிகேடியர் ஆர். டி. சதர்லந்து ஒரு விமான விபத்தில் கொல்லப்பட்டார்.

அக்டோபர் 5.—கொலம்பங்கரா தீவிலுள்ள விலா என்னுமிடத்திற்குத் தப்பியோட முயற்சித்த ஜப்பானியப் படைகளை நேசதேச யுத்தக் கப்பல்கள் கடுமையாகத் தாக்கின.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.